

# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.


குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௫௰௬ ஆடி மீ. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். சங்கியை, எ.


பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | சி. | க |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௬ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

SUBSCRIPTIONS.

| | £ | s | d |
|---|---|---|---|
| Mr. Peter Pullynayakam - - | | 1 | 0 |
| " C. S. Ramalingam - - - | | 2 | 0 |

## ஆடிமாதம்.

இம்மாதத்தில் யூலியஸ்சைசர்(Julius Cesar) என்பவர் பிறந்ததினால் அவர் நாமம் காரணமாய் யூலை என வந்தது. இதற்குமுன் ஐந்தாம்மாதமெனக் கருதும் குவின்றிலிஸ (Quintilis) என்னும் நாமத்தால் அழைக்கப்பட்டது. இம்மாதத்தில் சூரியன் சிங்கவிராசியில் நிற்கிறதாகத் தோற்றும். தமிழர் ஆடி மாதத்தின் முதலாந் திகதியை மங்கலநாளாகக் கொண்டாடுவார்கள். ஆடி மாதத்தில் உண்டாகுங் காற்றினால் மழை குறைந்துபோமென்பார்கள். ஆடியில் பிரபலமாக யாழ்ப்பாணத்திற் கற்பகதருவென்னும் பனை தன் கனிகளைக் கொடுக்க ஆரம்பிக்கும். வெயிலின் உஷ்டணம் மிகுதி. தேசம் வரண்டு மரந்தடிகளெல்லாம் வாடிப் பச்சையென்பது காணப்படாமல் மிருகம் பறவை முதலியவைகள் தாகந்தீர்க்க தண்ணீர்கிடைப்பது அரிதாகவிருக்கும்.

## ஒன்றுக்கும் ஆகாதவன்.

ஒரு பிச்சைக்காரன் விட்டெறிந்த ஒரு பழந்துணி வழியிலே கிடந்த சேற்றில் விழுந்து மிதிபட்டு, ஒன்றுக்கும் ஆகாமல் கெடுவானாய் கிடந்தது. ஒருநாள் ஒருத்தி தன் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு அவ்வழியே போகையில் அந்தத் துணியைக் கண்டு, இது ஒருவகைக்கு ஆகும். ஆகையால் இதை எடுத்துக்கொண்டுபோகவேணுமென்க, மகன், சீச்சீ, அதைத் தொடாதே, அம்மா! உன் கையெல்லாம் அழுக்காகும். அது ஒன்றுக்கும் ஆகாததென்றான். தாயோ! நல்லது, பார்க்கட்டும் என்று சொல்லி குனிந்து எடுத்து. அழுக்கடைந்து பியந்துபோயிருந்த அந்தத் துணியை வீட்டிற்கொண்டுபோய் தண்ணீரிலே கசக்கி அழுக்கெடுத்து மற்றக் கந்தைத் துணிகளோடு கூட ஒரு பையில் போட்டு வைத்தான். சிலநாளுக்குப் பின் அவள் அதை எல்லாம் கடதாசி உண்டுபண்ணுகிற ஒரு தொழிலாளிக்கு விற்றாள். தொழிலாளி அதைக் கொண்டுபோய் துண்டு துண்டாய்க் கிழித்து நையப்பிய்யத்தல்லி ஒருவிதக் கூழாக்கினான். கூழாக்கி என்னசெய்தான்? சுத்தமும் வெண்மையுமான ஒரு கடுதாசியாக்கினான். ஒன்றுக்கும் ஆகாதென்று ஒரு பிள்ளை சொன்ன பழந்துணி இவ்வளவு நேர்த்தியான கடுதாசியாயிற்று. பின்பு அதை ஒரு அச்சியந்திரத்தில் கொண்டுபோய் அச்சிடப்பட்டது.

நேர்த்தியான கடுதாசியாய் மாறின இந்தப் பழந்துணியில் பதிந்தஎழுத்துக்கள்என்னவென்று நினைக்கிறீர்கள்? தேவனுடைய திரு வசனத்திலடங்கிய வார்த்தைகள்தான். அந்தக் கடுதாசி வேதபுத்தகத்திலுள்ள ஒரு தாளாயிற்று. இந்த வேதபுஸ்தகம் எங்கே போயிற்று? அது தன் கிருபையின் சங்கதியை எந்தவீட்டில் எந்த இருதயத்திற்கு அறிவிக்கும்படி கருதப்பட்டது. அதைக் கட்டிப் பொற்பூச்சுப் பூசி விலைக்குவிற்றார்கள். அப்போது அது இராசஸ்திரியவர்களின் மாளிகையில் போயிற்று. இராசஸ்திரியவர்கள் அதை தமது கையால் திறந்து தமது கிரீடத்தைப்பார்க்கிலும் அருமையான பொக்கிஷம் அதில் அடங்கியிருக்கிறதாகக் கண்ணூன்றி வாசித்தார்கள். அவர்களுடைய தேசத்துக் குடிகளில் மிகவும் எளிமையான ஒருவன் விட்டெறிந்த ஒரு பழந்துணி அவர்களுக்கு இவ்வளவு அருமையாய்த் தோன்றின காரணம் என்ன? அது கழுவி சுத்திகரிக்கப்பட்டுதானாய் மாறினதின்பின்பு அதில் பதிக்கப்பட்ட தேவவசனம் அதற்கு இவ்வளவு அருமையைக் கொடுத்தது.

இந்தக் கதையினால் என்ன புத்தி கற்றுக்கொள்ளுகிறோம்? அது இன்னதென்று உங்களுக்கு விஸ்தரிக்கவேண்டுமா? என்று அந்த அம்மாள் சொல்லியிருந்த வாஞ்சையாய் பிள்ளைகள் மேல் கண்ணூன்றி, பின்னும் சொன்னதாவது. சேறுள்ள அந்த வழியில் கிடந்த பழந்துணிபோலக் கவனிக்கப்படாத சிலர் இவ்வுலகத்திலுண்டு. ஆகிலும் பாவத்தினால் அழுக்கடைந்திருக்கிற ஆத்துமா ஒன்றுக்கும் ஆகாது என்று ஆர் சொல்லக்கூடும்? தேவனுக்கு விரோதமாய் நாம் செய்த பாவங்கள் மிகுதியாயிருந்தும், அவருடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவின் இரத்தம் நம்மைச் சகல பாவங்களுமறச் சுத்திகரிக்கத்தக்கதாகவே இருக்கிறது.

கதையிலே காட்டப்பட்ட தாளை மீட்கப்பட்ட ஆத்துமாவுக்கு ஒப்பிட்டுப் பேசலாம். அந்தத் தாளைப்போல மீட்கப்பட்ட ஆத்துமா உலக ராசாவின் அரமனைக்கல்ல, ராசாதிராசனின் அரமனைக்குக் கொண்டுபோகப்படும். அந்த ராசாவானவர் அதின்பேரில் அருமைகொண்டு அதைத் தமது பொக்கிஷமாக மதிப்பார். ஒன்றுக்கும் ஆகாதவர்களென்று உலகத்தார் இகழுகிற சிலருடைய முடிவு எவ்வளவோ சந்தோஷமும் மகிமையும் பொருந்தியதாயிருக்கப்போகிறது.

அந்தத் துரைசாணி பேசிமுடித்தும் அவளுடைய வார்த்தைகள் ஜோன் என்னும் அந்த ஏழைப்பையனின் காதிலே தொனித்துக்கொண்டேயிருந்தது. ஒன்றுக்கும் ஆகாதவன் என்று நினைத்து மனந் தளர்ந்துபோயிருந்த அவனிடத்தில் சற்றே நம்பிக்கை உதிக்கத் துவங்கிற்று. மிதிபட்ட பழந்துணிபோலிருக்கிற நான் இனிமேல் அதைப்போலப் பாக்கியம் பெறுவேனோ? என்று எண்ணிக்கொண்டிருப்பதை துரைசாணி கவனித்து அவன் கிட்டப்போய் அவன் பெயரையும் அன்று காலையில் அவன் பள்ளிக்கூடத்திற்கு வந்த காரணத்தையுங் கேட்டாள். அதற்கு அவன் என் பெயர் ஜோன். தேவனே என்னைப் பள்ளிக்கூடத்திற்கு வரப்பண்ணினாரென்று உணர்வோடு சொன்னான். அவனுக்கு வீட்டுவாசல் இனஞ்சனமில்லையென்று அம்மாள் அறிந்து அவனுக்கு உதவிசெய்து அற்ப வேலையுங் கொடுத்து ஒழுங்காய் பள்ளிக்கூடத்துக்கு வரச்சொல்ல, அவனப்படியே செய்து தன் பரமபிதாவில் நம்பிக்கைவைக்கக் கற்றுக்கொண்டான். அவன் பின்பு காகிதங் கொண்டுபோகும் தூதனாக நின்று பின்பு இருபது வருஷமாய் ஒரு துரைக்கு வேலைக்காரனாயிருந்தான். அவன் மிச்சம்பிடித்த முதலைக்கொண்டு யாபாரம்நடத்தி யாவராலும் புகழ்ச்சிபெற்ற நற்குணமுள்ள புருஷனும் தகப்பனும் எசமானும் ஆயினான். ஒன்றுக்கும் ஆகாதவன் என்று நம்மைப்போன்ற ஒரு பாவி சொல்லி இகழ்ந்த அவன் தேவகிருபையால் இவ்வளவு மேலான நிலைமையடைந்து தேவபத்தியாய் வாழ்ந்திருந்தான். [தேசோபகாரி.]

## காயும் கள்ளனும்.

அனேக சனங்கள் திரண்டு ஒருதோட்டத்துக்குப் போகையில் ஒருநாயும் பின்னொரு மனுஷனுமாகக் கூடப்போனார்கள் அப்பொழுது காவற்காரன் அவனைப்பார்த்து நாயைக்கூட்டிக் கொண்டு போகப்படாது நாயைவிட்டுப் போமென்றான். அவ்வேளையில் மனுஷன் நாயைப்பார்த்து நீ இங்கேயில் பிறகுவந்து உன்னை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போவேனென்று சொல்லி தோட்டத்துக்குமற்றவர்களுடன்கூடிப்போனான். சற்றுநேரத்தால் தனது நாழிகைவட்டத்தைஎடுக்கும்படி கைவைத்துப் பார்க்கையிற் சங்கிலி இரண்டாக அறுக்கப்பட்டு நாழிகைவட்டம் காணாமலிருந்தது. உடனே அவன் காவற்காரனிடம் வந்து நாழிகைவட்டத்தைக் காணவில்லை எனது நாயை என்னுடன் கூடவிட்டால் நல்லது என்க அப்படியாகட்டுமென்றான். அவன் தனது நாயின் பேரைச் சொல்லி எனது சட்டைச்சாக்கைப்பார், சங்கிலி அறுபட்டிருப்பதையும் பார். கள்ளன் இத் தோட்டத்துக்குள் நிற்கிறான் தேடிப் பிடித்துக்கொண்டுவா என்க, நாயும் தலையை ஆட்டி வாலைக் குழைத்து இவனுடன் கூடப்போய் இந்தச் சங்கிலியை மணந்து பின் அங்கே நிற்கிறவர்களின் சட்டைச் சாக்கை மணந்து சற்றில் ஒருத்தனுடைய சட்டைச்சாக்கைக் கெட்டியாக இறுக்கிக் கடித்துக்கொண்டு நின்றது. உடனே இம் மனுஷன் மற்றவர்களுக்கு அதைக் காட்ட அவர்கள் எல்லாரும் வந்து அவனைச் சோதிக்கையில் இந் நாழிகைவட்டத்

டன் பின்னும் ஆறு கடிகாரம் அவன் காக்குக்குள்ளிருந்தன. இந்த ஆறையும் அன்று காலமே அங்கே வந்தவர்களிடத்தில் திருடி வைத்திருந்தான். ஏழு கடிகாரத்துக்குள் நாய் தனது எசமானுடையதைத் தேடிச் சந்தோஷத்துடன் எடுத்துக் கொடுத்தது. ஒரு வெட்டிக்காரப் பெலீஸ்க்குச் சரியாக நாய் புத்திபார்க்க நடந்ததை என்னவென்று விரித்து சொல்லுவோம்.

## பிற்காரியம்எப்படி?

ஒரு பிதாவிடத்திற் பிறந்த நாலைந்து பிள்ளைகள் ஒரிடத்திற் கூடி தங்களுக்குள் பேசின சம்பாஷணையாவது. ஒருவன் பின்னொருவனை நோக்கி சின்னத்தம்பி நீ மனுஷனாக வருங்காலத்தில் என்னசெய்ய நினைத்திருக்கிறாயென்க, நீதிஸ்தலங்களில் ஒரு நியாயதுரந்தரனாக (பிறக்கிறாசி) நிற்பதுவே எனது மனமென்றான். நியாயதுரந்தரர் நீதியைப் பெரும்பாலும் நடப்பிக்கிறதில்லை. பணம் என்னும் ஆட்கொல்லி அகப்படுமாகில் பொய்யை மெய்யாக்குவார்கள் மெய்யைப் பொய்யாக்குவார்களென்று நல்லதம்பி சொன்னான். அது மெய்தான் நான் அப்படிக்கொத்த நியாயதுரந்தரனாகவாயிருக்கவில்லை. பணங் கிடைத்தாலென்ன கிடையாதிருந்தாலென்ன நீதியானபக்கத்திற்கு நிற்பதே எனது விருப்பம். அநாத பிள்ளைகளையும் விதவைகளையும் தரித்திரரையும் ஒருவரும் மோசப்படுத்தாமற் காப்பதுவே எனது முழு எண்ணமென்று சின்னத்தம்பி சொன்னான்.

நல்லது நல்லதம்பி உன் காரியம் என்னவென்று சின்னத்தம்பி கேட்க, நான் ஒரு வைத்தியனாக வருவதே என்விருப்பம். இரவும் பகலும் சவாரிபண்ணுவேன். நாலு குதிரை வைத்துக்கொண்டு அஞ்சலுக்கு அஞ்சல் மாற்றிக் கட்டுவேன். நமது ஊரிலுள்ள வைத்தியனைப்போல முட்டுக்காலுள்ள குதிரையில் ஏறிப் போகமாட்டேன். இப்படி நல்லதம்பி சொல்லுகையில் பெரியதம்பி என்பவன் ஆனந்தத்துடன் நல்லதம்பி! நான் உனது நாலு குதிரைக்கும் இலாடன்றைக்கிறவனாக இருக்கிறேனென்றான். உடனே எல்லாருங் கெக்கட்டமிட்டுச் சிரிக்க நல்லதம்பி நான் கெட்கப்படமாட்டேன். நீ எப்பொழுதும் காணயமுள்ளவனாகவிருக்கவேண்டும்; நீ கர்த்தமுள்ளவனாகவிருக்கவேண்டும் என்றான். அப்பொழுது சின்னத்தம்பி என்பவன் காரியம் வாய்த்துக்கொண்டது. ஒரு பிதாவுக்கு ஒரு நியாயதுரந்தரன், ஒரு வைத்தியன், ஒரு கொல்லன் என்பவர்கள் ஒரு வீட்டில் வசிக்கிறார்கள் என்று சொல்ல தாயானவள் என் அருமையான மக்களே, இங்கே என் பக்கத்தில் உங்கள் இளையதம்பியிருக்கிறானே அவன் என்னவாயிருப்பானென்று கேளுங்கள் என்றாள். உடனே பெரியதம்பி இளையதம்பியைக் கட்டி எடுத்து தம்பி நீ அப்புவைப்போல பெரிய மனுஷனாகவரும்பொழுது என்னவாயிருக்க விரும்புகிறாயென்றான். இளையதம்பி அதற்கு நான் என் மாதாவை நேசிக்கிறவனாகவிருப்பேனென்றான்.

அப்பொழுது மாதாவானவள் பிள்ளைகளை நோக்கி என் பிள்ளைகளே நீங்கள் சிங்காசனங்களில் வீற்றிருப்பதல்ல, இரட்டைக் குதிரைகட்டி சவாரிபண்ணுவதல்ல கீழ்மையான பணிவிடைகளைச் செய்து உங்கள் பெற்றாரில் அன்பாயிருப்பதே யோக்கியமும் பெருமையும் மேன்மையுமாகவிருக்கும். மற்றும்படி ஒருவரும் மனச் சந்தோஷமுள்ளவர்களாக வரமாட்டார்கள். நன்மையாக விருத்தலே சந்தோஷத்தையுண்டுபண்ணும். ஆகையால் இளையதம்பி என்பவன் சொன்ன வாக்கையே உங்கள்மனதில் வைத்துக்கொள்ளுங்களென்றாள்.

பிள்ளைகளே, அநேகர் உத்தியோகத்திலும்பணத்திலுங் கறிக்கும்பொழுது தங்கள் பெற்றாரில் வைக்கவேண்டிய பட்சத்தை விட்டு தங்கள் ஆஸ்திகளிலுங் கனத்திலுமே தங்கள்மனதை வைக்கிறார்கள்.



## வரிக்குதிரை அல்லது சீபிரே.

சீபிரே (Zebra) குதிரைவகையைச் சேர்ந்தது. இதின் அங்கம் முழுவதும் வரிவரியானகோடுகளிருக்கின்றன. கழுதையின் சாங்கமாக விருக்கிறது. அதின் தன்மைகளிற் குதிரையைப் போன்றிருக்கிறது. மனுஷரால் இது வசப்படுத்தப்படவில்லை. மிகு மூர்க்கமுள்ளதும் அதிவிரைவாய் ஓடக்கூடியதும் மிகவுஞ்சிறப்புள்ளதுமான மிருகமாயிருக்கிறது. ஆண்வகையானவைகள் மஞ்சல் நிறமாகவும் அவைகளின்மேல் கரும்[illegible]விழுந்திருக்கும். பெண்வகையானவைகள் வெண்ணிறமாகவும் அவைகளின் மேலும் கருங்வரிகளுண்டு. அபிசினியா நாடு தவங்கி தென்பக்கத்திலுள்ள மலைநாடுகளெல்லாம் இவ்வகை மிருகங்களால் நிறைந்திருக்கின்றன. பெரும்பாலும் மிருகராசனாகிய சிங்கம் இவைகளைக் கொன்று சாப்பிடுவான். அத்திசைகளிலுள்ள காட்டுச்சனங்களும் இம்மிருகத்தை தங்கள் ஆகாரமாகக் கொள்வார்கள்.

## ஆகாத அஸ்திபாரம்.

ஒருநாள் பட்டினத்திற்குத் தெருவழியாகப் போகையில் சனசனங்கள் கூடி ஒரு புதுவீடு கட்டுகிற இடத்தில்நின்று அமளியாகப் பேசுகிறதைக்கண்டு, அது என்னவென்று விசாரித்தவிடத்திற் சுவர்விழுந்து இரண்டுபேரைக் கொன்றதுமன்றிப் பலரை ஊறுபடுத்தினதுமென்றுகண்டேன். நின்றவர்கள் சகலரும் பரிதாபசிந்தையுள்ளவர்களாக இருந்தார்கள். ஒவ்வொருவரும் சுவரேன்விழுந்தது? எப்படி விழுந்தது? ஆர் குற்றவாளி என்று விசாரிக்கையில் ஒருவன சுவரின் அஸ்திபாரத்தைக்காட்டி, கற்சிப்பனே குற்றவாளி என்றான். அஸ்திபாரத்தைப் பரிசோதிக்கையில் ஆகாத அஸ்திபாரமாயிருந்தது. அந்த அஸ்திபாரத்தின்மேற் சுவர் நிற்கமாட்டாதெனக் காணப்பட்டது.

ஐயோ! இரண்டு ஆத்துமா தங்கள் கடைசிக்கணக்கைக் கொடுக்கும்படி நித்திய உலகத்திற்குப் போய்விட்டார்களென்ற சஞ்சலத்துடன் மனதிற் கவலையுள்ளவனாக என்வழியே போனேன். கெட்ட அஸ்திபாரமே அவர்களின் மரணத்திற்குக் காரணம். இப்படிக் கவலையற்றவிதமாக நடக்கிறவன் அல்லது அஸ்திபாரம்போடுகிறவன் தப்ப வழியுண்டா? அவன் துரோகியலலவா? கொலைபாதகனல்லவா? இப்படிக்கெட்ட அஸ்திபாரத்தால் எவ்வளவுபேர் கெட்டுப்போகிறார்கள். இவ்வகை அஸ்திபாரம் போடுகிறவர்கள் ஆராரென்று சிந்தித்தேன்.

ஆரெனில், உவாத்தியார் உற்றநோக்குகையில் தான் அமைதியாகவிருந்து தன் பாடத்தை வெகுமுயற்சியுடன் படிக்கிறவனாகக் காட்டுகிறவனும், மறுபேர் எழுதும் மறுமொழிகளைப் பார்த்து எழுதுகிறவனும், தன் புத்தகங்களையும் ஏடுகளையும் கவலையீனமாக வைக்கிறவனும், அவைகளைக் கிழிக்கிறவனும், வேலைக்கள்ளனும், தெருவில் வீணாகத்திரிந்து பசப்புகிறவனும், பள்ளிக்கூடத்திற்குப் போகிறதாகப் பாசாங்குபண்ணி ஒளித்துத் திரிகிறவனுமே ஆகாத அஸ்திபாரம் போடுகிறான்.

இன்னும் தன் வீடுவாசல்களைத் துப்புரவுபண்ணுதவனும், கண்டபடி தன் சீலையை அழுக்காக்கிறவனும், தன் தலைமயிர் சீவிக்கட்டாதவனும், பேன்பற்றவிடுகிறவனும், தன் பண்டம்பாடிகளை ஒழுங்காகவையாதவனும், நித்திரையை விட்டு எழும்பாதவனும், தன் வரவுக்கு மேலாகச் செலவழிப்பவனும், பிள்ளைகளைச் செவ்வையாகப் பராமரியாதவனும், தன்வீடுவிட்டு அடிக்கடி அயல்வீட்டுக்குப் போகிறவனுமே ஆகாத அஸ்திபாரம் போடுகிறான்.

வீட்டில் யாதொரு வேலையைச் செய்யும்படி பெற்றார் ஏவுகையில் நான்மாட்டேன் என்கிற பிள்ளைகளும், முரண்டுக்குணங் காட்டுகிறவர்களும், அல்லது செய்யப்போகும்பொழுது பழஞ்சீலைபோலச் சத்தம்பண்ணி முறுமுறுக்கிறவர்களும் தருமகாரியங்களுக் கிடவேண்டிய பணங்களை முட்டாயி, சற்கண்டு, பனங்கட்டி முதலியவைகளிற் செலவிடுகிறவர்களும், தங்கள் தங்கள் வேலைகளுக்குப் போவதற்குக் காலதாமதம்பண்ணி நிற்பவர்களும், தேவாராதனைக்கு அல்லது பள்ளிக்கூடத்துக்கு நேரஞ்சென்று போகிறவர்களும், கூடுக்கூட்டங்களில் நியாயமின்றி எழுந்துபோகிறவர்களும், நேரகாலத்துக்குப் பந்திக்குவராதவர்களும், செய்யவேண்டிய கடமைகளை நிறுத்தி வீண்கதைகளை வாசிக்கிறவர்களும், இன்னும் இவைபோன்ற காரியங்களைச் செய்கிற எவருமே ஆகாத அஸ்திபாரம் போடுகிறார்கள்.

இவ்வகை அஸ்திபாரம் போடுவோர் எப்படிப்பட்டவர்களாவாரெனில், சோம்பேறிகளாகவும், வீண்பொழுது போக்குகிறவர்களாகவும், தீர்மானமற்றவர்களாகவும், நாணயத்தப்பிலிகளாகவும், ஒய்வுநாளை மீறுகிறவர்களாகவும், குடிவெறியராகவும், சூதுகாரராகவும், திருடராக

வும், பொய்யராகவும், காமிகளாகவும் வருவார்கள்.

ஆகையாற் பிள்ளைகளே, இளமையில் நீங்கள் கட்டும் அஸ்திபாரம் எப்படி என்று பரிசோதித்து நல்ல அஸ்திபாரத்தைப் போடுங்கள். தமது சபையைப் பூமியிற் கட்டுகிற யேசுவை நோக்கி உங்கள் அஸ்திபாரத்தைப் போடுங்கள். நீங்கள் தமது மாளிகையாக வருவதற்கு அவர் உதவிசெய்யக் காத்திருக்கிறார்.

## சரியான கேள்வி.

ஒரு ஓய்வுநாளில் ஒரு சிறுபிள்ளை வீட்டின் முற்பக்கத்தில் நின்று சொட்டைகட்டி விளையாடினான். அப்பொழுது தாயானவள் மகனே, இன்றைக்கு ஓய்வுநாள், நீ வெளியில்நின்று விளையாடாதே. நீ சொட்டைகட்டி விளையாடப்பிரியமானால் வீட்டின் பின்பக்கத்துக்குப் போ என்றாள். அப்பொழுது பிள்ளை, ஆச்சி! பிற்பக்கத்தில் ஓய்வுநாளில்லையா என்றான்.

என் சிறுபாலியரே,

நான், ஒவ்வொருமுறையும் உங்கள் பாலியர்நேசனில் எழுதியனுப்பும், வேதாகம சரித்திரங்களை, இது வேதத்திலுள்ள நாங்கள் படித்தறிந்த சரித்திரந்தானே, இதை ஏன் வாசிப்பான், அவசியமில்லையென்று எண்ணி அலட்சியம்பண்ணாமல், அதிக கவனத்துடனும், பிரியத்துடனும், வாசித்து வருகிறீர்களென்று நம்புகிறேன். ஏனென்றால், அநேக பிள்ளைகள் ஏதும் விநோதமான சரித்திரங்களென்றால் அதிகமாய் விரும்பி வாசிப்பார்கள். வேதசரித்திரமென்றால் சற்றுங் கவனிக்கமாட்டார்கள். ஆனால் யேசுரட்சகரை மனதார நம்பி நேசிக்கிற பிள்ளைகளோ, அவரைப்பற்றிக் கேள்விப்படவும், வாசிக்கவும், மெத்த அதிகமாய் விரும்புவார்கள். அவர் உலகத்திலிருக்கையிற் பேசின பேச்சுக்களையும், செய்த காரியங்களையும், மிகவும் இன்பமாய்க் கேட்பார்கள். சில பிள்ளைகள், தங்கள் மாதாமார் சாயங்காலத்தில் ஒரு வேலையுமின்றி உட்கார்ந்திருக்கும்போது, அம்மா, ஆச்சி, எனக்கு யேசு ரட்சகரைப்பற்றிச் சொல்லும் என்று கேட்டதாக நான்கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுக்குள்ளும்அப்படிப்பட்ட பிள்ளைகள் இருக்கிறீர்களேயாகில், அப்பெயர்ப்பட்ட பிள்ளைகள், இந்தப் பாலியர்நேசன் உங்கள்கையிற்கிடைக்கும்போதெல்லாம், இதில், எனது அருமையான ரட்சகரைக்குறித்து என்ன எழுதியிருக்கிறதென்று தெரிந்தெடுத்து வாசிப்பீர்கள். இப்போதும் நான் உங்களுக்கு, எங்கள் இரட்சகர்செய்த ஒரு அற்புதத்தைக்குறித்துச் சொல்லுகிறேன்.

பிள்ளைகளே, நீங்கள் எப்போவாவது கடற்கொந்தளிப்பைக் கண்டீர்களா? ஒருவேளை சில பிள்ளைகள் கண்டிருக்கக் கூடும். மாரிகாலத்திலும், கோடைகாலத்தில் இப்போ இரண்டொரு மாசங்களாயிருக்கிறபடி காற்று உரத்து அதிக பெலமாய் வீசும்போதிலும், கடலோரத்தில் நின்று பார்க்கும்போது, மெத்தப் பயங்கரமாயிருக்கும். ஒவ்வொரு திரையும் ஒன்றின்பின் ஒன்றாய் உக்கிரங்கொண்டு, எழும்பி ஆர்ப்பரித்து மோதியடிக்கும். அவ்வேளையிற் சமுத்திரத்தில் நிற்கும், தோணி, கப்பல் முதலிய உருக்கள், நீங்கள் கட்டி ஆடும் ஊஞ்சல்போல ஆடி ஆடி, இப்போதானே கடலில்அமிழ்ந்தப்போகிறதென்று யாவரும் அஞ்சத்தக்கவிதமாய் அக்கப்பாடுபடும். மாலுமிகள் அவ்வேளையிற் தங்கள் போசனத்தையாவது, வேறென்னத்தையாவது கவனியாமல், தங்கள் உருக்களை மோசமின்றிக் காத்துக்கொள்ளும்படி தங்களாலான பிரயெத்தனஞ் செய்வார்கள். அந்த உருக்களிலிருப்பவர்கள் தங்கள் சீவனுக்கென்னநேரிடுமோவென்று, ஏங்கிக் கலங்கி ஓலமிடுவார்கள். சில உருககள், மாலுமி, எவ்வளவு கெட்டித்தனமாய் நின்றாலும், கடற்கொந்தளிப்பினால் ஆழத்தில் அமிழ்ந்திப்போகின்றன. இப்படியே கடற்கொந்தளிப்பு மிகவும் பயங்கரமானது. இப்படிப்பட்ட ஒருகொந்தளிப்பையே எங்கள் இரட்சகர் நிற்ப்பாட்டினார்.



கடற் கொந்தளிப்பு.

பிள்ளைகளே, மேலேயிருக்கிற படத்தை நன்றாய் உற்றுப்பாருங்கள். அதின் கிழக்குப்பக்கத்தில் ஒருபடவு இருக்கின்றது. அதற்குள் சில ஆட்கள் இருக்கிறார்கள். உருவின் மேற்குப்பக்கத்தில் அநேக திரைகள் எழும்புகிறதையும், அதில் ஒரு இடத்தில் ஒரு பெரியதிரை எழும்பி மோதுகிறதுபோலிருப்பதையும், அதைப்பார்த்து ஒருவர் பேசுகிறதையுங் காண்கிறீர்கள். அந்தப்படவும், சமுத்திரத்தின்மேல் அக்கப்பாடு படுகின்றது.

இதுவென்னத்தைக்காட்டுகின்றது தெரியுமா? எங்கள் இரட்சகர் உலகத்திலிருந்தபோது, ஒருமுறை தமது சீஷருடன் படவிலேறியிருக்கையில், படவு திரைகளினால் மூடப்படத்தக்க அவ்வளவாய்க் கடலிலே, பெருங்காற்று உண்டாயிற்று. அவ்வேளையில், யேசு நித்திரையாயிருந்தார். அவருடைய சீஷர் அவருக்குக் கிட்டப்போய் அவரை எழுப்பி, கர்த்தாவே, எங்களை இரட்சியும், மாண்டுபோகிறோமே என்றார்கள். அவர் அவர்களை நோக்கி, அற்பவிசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்களென்று சொல்லி, எழுந்து, காற்றையுங் கடலையுங் கடிந்துகொள்ள, மகா அமைதியுண்டாயிற்று. அந்த மனுஷர் மிகவும் ஆச்சரியப்பட்டுக் காற்றுங் கடலும் இவருக்கு அமைந்திருக்கின்றனவே. இவர் எப்படிப்பட்டவர் என்றார்கள்.

பிள்ளைகளே, இந்த வசனங்களிற் சொல்லப்பட்டிருக்கிற காரியத்தையே இந்தப்படத்திற் காட்டியிருக்கின்றது. எங்கள் இரட்சகர் எப்படிப்பட்ட தத்துவமுள்ளவரென்பதைப் பாருங்கள் பிள்ளைகளே. அவர்சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். நல்லது இது என்னத்துக்கு அடையாளமாயிருக்கிறதென்பதை இனிப் பார்ப்போம். இந்த் சமுத்திரமென்பது நாங்கள் வாசம்பண்ணும் உலகத்தைக் காட்டும். இதில் எழும்பின பெருங்காற்று, நம்மை ஆண்டு, அடிமைக்கொள்ளும் பாவஇச்சைகள். இவ்விதமே பாவமென்னுஞ் சூறைக்காற்றினால் நாம் அடியுண்டு, தேவ சாபமென்னும் அலைகளினால் மூடப்பட்டுக் கலங்கும்போது, அந்த அலைகளின் மேலாக நின்று, அற்பவிசுவாசியே பயப்படாதே, நானே, உன்னை மீட்கும்படி வந்தேன், என்னை நம்பு என்ற ஆறுதலான வாக்கைச் சொல்லும், ஓர் சத்தம் எங்கள் காதிற்தொனிக்கவில்லையா? பிள்ளைகளே, யோனுவென்பவன், தேவசமுகத்துக்கு விலகிவிட வேணுமென்று எண்ணி ஓடினபோது தப்பிவிட்டானா? இல்லையே. உடனே கடற்கொந்தளிப்பு உண்டாகி, அவன் ஏறிப்போன கப்பல், அமிழ்ந்த ஏதுவாய் அக்கப்பாடு பட்டபோது, அவன் தான்செய்த பாவமே, அந்த மோசத்துக்குக் காரணமென்றுணர்ந்து, தன்னைக் கடலில் எறியச்சொன்னான். அங்கே ஆழத்திலிருந்து தன் பாவத்தை உணர்ந்துசொல்லித் தேவனை நோக்கிக் கூப்பிட்டு இரட்சிக்கப்பட்டானே. அவ்விதமே நீங்களும், தேவசமுகத்துக்கு விலகிக்கொள்ள மாட்டீர்களென்பதை உணர்ந்து, உங்கள் பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, யேசுவே, எங்களை இரட்சியும், நாங்கள் பாவமென்னுஞ் சூறைக்காற்றினால் அடியுண்டு, மாண்டுபோகிறோமேயென்று சொல்லிக்கூப்பிடுங்கள். அப்போது அவர் உங்கள்பாவங்களை நீக்கி, உங்களை இரட்சிப்பார்.

## மனரேம்மியம்.

ஒரு துரைமகன் தனது வளவின் வேலியில் ஒரு பலகையில் மெய்யாகவே ஒரு மனுஷன் மனரெம்மியமுள்ளவனாகவிருப்பதைக்கண்டால் அவனுக்கு இந்தவளவைக் கொடுத்துவிடுவேனென்று எழுதிவைத்தார். அதை வாசித்த பலருள் ஒருவன், ஐயா, நான் மெய்யாய் மனரெம்மியமுள்ளவனாக இருக்கிறேனென்றான். நீ மனரெம்மியமுள்ளவனானால் உனக்கு என்னவளவென்று துரைகேட்க மௌனமாய்ப் போனான்.

மனத்திருத்தியுள்ளவன் எந்த நிலைமையிலிருந்தாலுஞ் சந்தோஷமுள்ளவனாக இருப்பான். பொருளை அதிகமாகத்தேடுவதில் அல்லது தேடுவதைக் காப்பாற்றிக்கொள்வதில் மனச்சந்தோஷமிருப்பதில்லை. நமக்குள்ளது போதுமென்றிருத்தலே மனரெம்மியம்; அதுவே நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும்.

## சாராயஞ் செய்வது என்ன?

நியுயோர்க்கு என்னும் மாகாணத்தைச்சேர்ந்த ஒரு நாட்டிலுள்ள ஒரு மேன்மகன் மதுக்களை விற்கும்படி தத்துவம்பெற்ற ஒரு நகரணையில் புகுந்து தன் அறிவுமயங்குமட்டுக்கும் இறம் (Rum) என்னுஞ் சாராயத்தைக் குடித்தான். அறிவு மயங்கினவனாகத் தன் வீட்டுக்குச்சென்று தன் மனைவியை உடனே மிருகத்தைப்போலக் கொலைசெய்தான். குடித்துவெறித்து அறிவுமயங்கியிருக்கிற அவ்வேளையில் அவன் பிடிபட்டு அன்றிராத்திரியில் மறியற்சாலையில் அடைக்கப்பட்டான். அவ்விடத்தில் அவன் நித்திரைகொண்டு விழித்தெழும்பி விடிந்து சுவரைப்பார்த்து இரும்புக்கிறுதிகளால் வாதாயனங்கள் அடைபட்டிருப்பதைக் கண்டு, இது மறியற்சாலையா என்றான். அங்கே நின்றவர்களிற் சிலர் ஆம் என்க, எப்படி மறியற்சாலைக்கு வந்தேனென்றான்; அதற்கு நீ கொலைசெய்ததினால் வந்தாயென்க, ஐயோ! எனக்குக்காரியம் விளங்கவில்லையே, நான் இவ்விடத்திலிருப்பதை என் மனைவி அறியமாட்டாளா, அறிவாள் என்று சொல்ல, அப்படியாகில் நான் ஏன் இவ்விடத்தில் அடைக்கப்பட்டிருக்கிறேனென்றான். உன் மனைவியை நீயே கொலைசெய்தாய் என்னும் வார்த்தையைக் கேட்டவுடன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

பாருங்கள் இவனைப்பிடித்து மறியற்கூடத்தில் அடைத்துவைத்த கொஸ்தாப்புலே (Constable) ஊர்க்காவற்காரனே இவன் குடித்துவெறித்து அறிவுமயங்கும்படி சாராயம்விற்றவன். இவனைப் பிடிக்கும்படி மறியற்பத்திரத்தை அனுப்பின சமாதான நீதவானே மதுக்களை விற்கும்படி தத்துவங்கொடுத்த தலைவரிலொருவர். அவனைத்தூக்கின தலையாரி மதுக்களை விற்கிறவரும் குராங்கருவிகளை வையாளுகிறவருமாக விருந்தார்.

## பூமிசாஸ்திரக்கேள்வி.

௧. சீனத்தாத்தாரியின் பிரிவுகளென்ன? மாண்ஷூர் தாத்தர் என்றும், மங்கல தாத்தர் என்றும் காஷகாரதாத்தர் என்றும் மூன்று பிரிவு.

௨. திபெத்தார் வழிபடுந் தெய்வத்தின் பேரென்ன? கிறாண்ட்லாமா.

௩. இவ்வணக்கத்தை உண்டாக்கினதார்? புத்தன். அதினால் திபெத்தார் புத்தரென்றும் [illegible]வோ என்றும், தாத்தாரியர் சமணர் என்றுஞ் சொல்லுவார்கள்.

## Youthful Resolution.

## வாலிய நியமம்

C. M.

நான் என்றும் நன்மை செய்யவே
மாவாஞ்சை சொன்னுகிறேன்,
யேசுவைப்போல இருப்பதே
செல்வம் என்றெண்ணுகிறேன.

இளைஞன் ஏழையாயினும்
என் திராணிக் கேற்றதாய்
என் செய்கை சொற்பமாயினும்
செய்வேன் மா நேசமாய்.

எல்லாத் தீமைக்கு விலகி
நன்மையில் வாழுவேன்
யேசுநாமே என் புகழ்ச்சி
சத்தியத்தில் நிற்பேன்.

ஓர் பின்னைவாழ்வு சொப்பனம்
பிற்காலம் நித்தமாம்,
என்றெண்ணி எந்த தீமையும்
அகற்றி நிற்கலாம்.

இப்பலன் தேவன் அளிப்பார்,
என் மீட்பரை விடேன்,
பேரின்ப மேன்மை அருள்வார்,
நான் நம்பிக் கொண்ணுகிறேன.

## சத்தியவேதக்கேள்வி.

௯ ம் பாடம்.

யேசுவின் ஞானஸ்நானம்.

மத். ௩: ௰௩—௰௭.

௧. யேசு ஞானஸ்நானம் பெறும்படி ஆரிடம் வந்தார்?

௨. யோவான் அவருக்கு என்ன சொன்னான்?

௩. ஏன் மறுத்தான்?

௪. யோவான் தனக்கு என்ன அவசியம் என்றான்?

௫. ஞானஸ்நானமாவது என்ன? பரிசுத்தாவியினால் பாவம் நீங்குகிறதென்பதைக் காட்டும்படி தண்ணீரால் சுத்திகரிக்கப்பட்டு தேவனுக்கு ஒப்புவிக்கப்படுதலே.

௬. யேசுவுக்கு ஞானஸ்நானமாவது பாவத்தை நீக்குவதற்கு அவசியமா?

௭. யேசு ஞானஸ்நானம்பெற்றபொழுது சம்பவித்ததென்ன?

௮. பரிசுத்தாவி என்ன ரூபமாக வந்தார்?

௯. அவரைக் கண்டதார்?

௰. வானத்திலுண்டான சத்தம் என்ன?

௰௧. இவ்வாக்கைப் பேசினதார்?

௰௨. கலிலேயா எங்கே? பலஸ்தீனுவின் வடபகுதியில்.

௰௩. யோர்தான் நதி எங்கே? பலஸ்தீனுவுக்குக் கிழக்குபக்கமாக வடக்கேயிருந்து தெற்கே பாய்கின்றது.

## இவனல்லவோ விவேகி!

ஓ! என்னிருகண்மணிக்கிசைந்த பாலியரே?

மகா மேன்மைபொருந்திய செந்தமிழ்ப்பாண்டியநாட்டின் இராசதானியாகிய மதுரைமாநகரில் எழுநூறுவருடத்துக்குமுன் "கொண்டவன்பலமிருந்தால் குப்பையேறி சண்டை செய்யலாம்" என்றதுபோல அரசனின்அன்பால் அனேகவித்துவான்கள் முதல் அரிவரிகற்றவர்களிடமெல்லாம், கப்பம்வாங்கித்திரிந்த வித்துவசனகோலாகலனைப்போல, சகல கலைக்கியானதுரந்தரன் என்னொரு வித்துவானிருந்தான். "பொல்லார்க்குக் கல்விவரில் கர்வமுண்டாம்" என்ற செய்யுளைப்போல், அவனுக்கு உண்பெட்டகல்வியால் மிகக்கருவங்கொண்டு தனக்குச் சமமும் மேலுமானோரில்லையென்று யாவரும் பேசும்படிக்குச் செய்யநாடி தேயங்கள் தோறுஞ்சென்று அவ்விடங்களில் வசிக்கும் உபாத்தியாயர்கள் முதல் சற்றோரிடம் வாக்குவாதஞ்செய்து தனக்குக் கீழ்ப்படுத்திவருவதை பலர் கேள்விப்பட்டு அச்சமுற்றிருந்தார்கள்.

ஒருநாள் எண்ணமற்றவித்துவான் ஒரு சேரியில் வந்து அங்கேயிருந்த உபாத்தியாயரிடம் வாக்குவாதஞ்செய்ய முயன்றான். இதை உபாத்தி கேள்விப்பட்டு பயந்து நடுநடுங்கி இதற்கென்செய்வோம். பருபோவியின் உருட்டுக்கும் கருவத்துக்கும் நம்மாலாகுமா? எப்போற்கொற்ற சூக்கமபுத்தியுள்ளோரும் ஓட்டம்பிடித்தார்களே. நாமோ இலக்கணத்தில் எழுத்தின் விதியும் அறியவில்லையே. "ஆலையில்லாவூருக்கு இலுப்பைப்பூச்சக்கரை" என்றதுபோல இச்சேரியில் உபாத்தியென்று நாமம் பூண்டோமே என்றேக்கங்கொண்டு பாலியர் படிக்கும்படிக்குச் செய்துவிட்டு ஓடிப்போனான்.

படிக்கும் பாலியர் உபாத்தியாயர் ஓடிப்போனதை அறிந்து கிலேசமுற்றிருக்கும்போது ஒரு பொடியன் அவர்களை நோக்கிச் சொல்லுவான். "கிலேசப்படுவதினாலாவதென்ன? நான் சொல்வதுபோற்கேட்டால் கடவுள் அனுக்கிரகத்தால் கற்றும் மூடனாய்த் திரியும் வித்துவானைப் பங்கப்படுத்திவிடலாமென்றான். அதற்கு மற்ற பாலியோருமிணங்க அதிக சந்தோஷத்துடன் சில பெரும்புத்தகங்களைக்கொண்டுவந்து உபாத்தியாயர் இருக்குமிடத்தில் அடுக்கிவிட்டு, ஒரு பிரம்பைக் கையிலெடுத்துப் பிடித்துக்கொண்டு பாலியரை நோக்கி "எல்லோரும் அச்சரப்பிழையின்றி ஐந்துவிட்டால் பதினைந்துவரும். இல்லாவிட்டால் ஐந்துவரும் என்று மணலில் எழுதுங்க" ளென்றான்.

பொடியன் சொற்படிக்கு எழுதும்போது வித்துவானும் பள்ளிக்குவந்து பாலியரெழுதுவதைக் கண்டு ஒன்றும் புலப்படாமல் மயங்கி "ஐயோ நாம் கல்வியில் மிகச் சிறப்புள்ளவனென்றெண்ணினோமே. இப்போது வாயில்பால் மணமாறாத பொடியர்களெழுதும் வாசகத்தின் கருத்தறியக்கூடாத மூடனானோமே" என்றேங்கி அசைவற்றபாவைபோற் சற்றுநேரம் நின்று தலையை அசைத்துக்கொண்டு, சட்டாம்பிள்ளையைப்போலுலாவும் பொடியனைப்பார்த்து "அப்பா உபாத்தியாயரெங்கே" என்றுகேட்டான். அதற்கு அப்பொடியன் "ஏன் உபாத்தியாயரைத் தேடுகிறீர். ஏதேனும் சமாச்சாரமிருந்தால் சொல்லும், அதற்குமுன் நீரினாரென்றும் வந்த நோக்கமின்னதென்றும் தெரியப்படச்சொல்லு" மென்றான்.

அதற்கு வித்துவான் பாலியர் எழுதும் வாசகத்தின் கருத்து முந்த அறியாதவனாயிருக்க வந்த நோக்கத்தை வெளிப்படுத்தினால் மோசம் விளையும். அல்லது சொல்லாதுவிட்டால் கேட்போர் நகைப்பார்கள். ஐயோ! வங்காளத்து விளக்குமாறுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியதுபோல மூடனாகிய நமக்கு சகல கலைக்கியானதுரந்தரனென்று பெரிய பேருண்டுபட்டது. இதற்கென்செய்வோம். நாம் கொண்டகருவத்தின்பலனோ இவ்வாறு இழுத்துவிட்டது. ஆகிலும் பார்ப்போமென்று மனதின்கண்ணெண்ணி அப்பா என்பெயர் சகல கலைக்கியானதுரந்தரான் எனபார்கள். இருக்கட்டும். இப்போது எழுதிய வாசகம் உனது வாக்கியமோ அல்லது உங்கள் உபாத்தியாயருடையதோ. அல்லது பழமொழியோ அதன் கருத்தென்ன? தெரிந்தால் சொல்லென்றான்.

அதற்குப் பொடியன் கலகலவென்று நகைத்து "கனம்பொருந்திய ஐயாவே நீர் மகாவித்துவசிரோமணியாகவிருந்தும், பள்ளியிலோதும் பொடியனாகிய என்னை நோக்கி கிஞ்சமும் வாய் கூசாமல் கருத்தைக் கேட்பது ஆச்சரியமாகவிருக்கிறது. தாங்கள் அறியாததா? தாங்கள் கேட்பதை நோக்கிப் பரிகாசமாய்த்தோற்றுகிறது. உண்மையைச் சொல்லுவீராகில் உரைப்பேன்" என்றான்.

வித்துவான் மதிமயங்கி "உண்மை கருத்தைச்சொல்லும் என்று சாதுவாய்க்கேட்க, பொடியன் வித்துவானை நோக்கி "ஐயாவே தங்களுக்கு அதன் கருத்தின்னதென்றறியக்கூடாததாயிருந்தால் தாங்கள் அணிந்திருக்கும் விருதுகள் பாவுங் கழற்றி எனக்களித்துவிட்டு என்மாணாக்கனாகச் சம்மதித்தால் உரைப்பே" னென்றான். அதைக்கேட்டவுடன் இடிவிழக்கப்பட்ட உயிரைப்போற் கலங்கி இனி என்ன செய்கிறது "அம்மாவின் செட்ட கேட்டுக்கு முக்காடும் வேண்டுமோ" என்றதுபோல நமக்கு விருதும் பெயரும் வேண்டுமோவென்று சுருதி பொடியனுக்களித்து உனது மாணாக்கனானேன் தயவுசெய்து சொல்லுமென்றான்.

பொடியன் வித்துவானைப்பார்த்து (ஐந்துவிட்டால்) நண்டு வளையில் ஐந்துவிரலைவிட்டால் (பதினைந்துவரும்) அங்ஙனம் நண்டிருந்தால் நண்டின்காலோடு பதினைந்தாகவரும். (இல்லாவிட்டால் ஐந்து வரும்) நண்டில்லாவிடில் ஐந்துவிரல்மட்டில்வரும் என்ற கருத்தைச்சொல்லி விரட்டிவிட்டானும்.

ஆ! பாலியரே இப்பொடியனின் விவேகமும் தயிரியமுங் கண்டீர்களா? இப்படிக்கல்லவோ நீங்கள் தயிரியமுடன் யாவரும் புகழத்தக்ககாரியங்களைச் செய்யவேணும். அவ்வாறு செய்யாமல் சோலி, பந்து முதலான விளையாட்டில் காலம்போக்குவது விவேகமா?

இப்படிக்கு,

சிங்காப்பூர் சாரங்கோங்ரோட்டானுடைய பாலியர் பிறியன்.

## தயவான சொற்கள்.

தயவான சொற்களுக்குப் பணம் வேண்டியதில்லை. அவைகள் நாக்கை அல்லது உதடுகளை எரிக்கமாட்டாது. இவ்வார்த்தைகளைப் பேசினதால் ஒருவன் மனவிசனமடைந்தானென்று நாம் ஒருபொழுதும் அறியவில்லை. அவ்வார்த்தைகளினால் மற்றவர்கள் சவுக்கியப்படுகிறார்கள். கோபவாக்குகள் மற்றவர்களின் மனதைக் கொதிக்கப்பண்ணுகிறது. சூடானபேச்சு சூட்டை உண்டாக்குகிறது. கசப்பான சொற்கள் கசப்பை உண்டாக்குகிறது. தயவான வாக்கு மனச்சிவை வளர்க்கிறது. பிள்ளைகளே, உங்கள் வார்த்தைகளின் தன்மையென்னவென்று சிந்தித்துப் பாருங்கள். சாந்தமான உத்தரங் கோபத்தை நீக்குகிறதென்று ஒரு ஞானி சொல்வதை மனதில் அமைத்துக் கொள்ளுங்கள்.

## விடை.

பாலியர்நேசன் ௯ம் புத்தகம் ௫ம் சங்கியை ௰௮ம் பக்கத்தில் "விடைவேண்டு வினாக்கள்" என முகவுரையிட்டிருப்பதற்கு விடையருளுகிறேன்.

௧. சூரியனைத் தன் கண்ணால் இமைவெட்டாமல் எதிட்டு உற்றுப்பார்த்து நிற்கக்கூடிய பட்சி, கழுகு.

௨. ஒரு மைல் தூரத்திற் கப்பாலிருக்குந் தண்ணீரைத் துருப்பிடித்து மணந்தறியும் மிருகம், ஒட்டகம்.

௩. அதிபிரயோசனமற்ற மிருகங்கள்; அழகுள்ள மிருகங்கள்.

௪. ஒவ்வொரு காலிலும் இரண்டு பெருவிரலுள்ள பட்சி, கிளிக்குருவி.

௫. முக்கோணவடிவாகப் பறக்கும் பட்சிக் கூட்டம், நாரை (Cranes.)

௬. மும்முரமாய்க் காற்றடிக்கும்பொழுது, அவை விருத்தாகாரமாகப் பறக்கின்றன.

௭. தீமைசெய்யா மிருகங்கள், அசைவெட்டும் அல்லது இரைமீட்கும் மிருகங்கள்.

௮. தண்ணீர்த்தாகமற்ற மிருகம், தேவாங்கு (Sloth )

௯. நாற்பத்திரண்டு பல்லுள்ள மிருகம், நாய்.

௰. நாற்பத்துநாலுபல்லுள்ள மிருகம், பன்றி.

இப்படிக்கு, க. சி.

கொக்குவில் ஆனி மீ ௨௨.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley Strong, Manepy, Jaffna.